தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், சென்னை – 6

ந.க.எண் 69913 /சி4/இ2/2021, நாள். 01.03.2022.

பொருள்: தமிழ்நாடு பள்ளிக் கல்வி - சார்நிலைப் பணி – 01.01.2022 அன்றைய நிலையில் உடற்கல்வி ஆசிரியர் பணியிலிருந்து உடற்கல்வி இயக்குநர் நிலை-2 பதவி உயர்வு – இறுதி தேர்ந்தோர் பெயர் பட்டியல் வெளியிடுதல் - சார்ந்து.

பார்வை:

1. தமிழ்நாடு பள்ளிக்கல்வி சார்நிலைப் பணி சிறப்பு விதிகள்.
2. அரசாணை (நிலை) எண்.98, பள்ளிக்கல்வி (எம்(1))த் துறை நாள். 09.05.2008.
3. அரசாணை (நிலை) எண். 107, பணியாளர் சீர்திருத்தத் துறை நாள். 18.08.2009.
4. அரசாணை (நிலை) எண்.156, பணியாளர் சீர்திருத்தத் துறை நாள்.20.09.2001.
5. அரசாணை (நிலை) எண்.242, உயர்க்கல்வி (எம்(1))த் துறை நாள். 18.12.2016.
6. அரசாணை (நிலை) எண்.39, பள்ளிக்கல்வி (பக3(1))த் துறை நாள். 09.02.2012.
7. அரசாணை (நிலை) எண்.232, உயர்க் கல்வி (கே2))த் துறை நாள். 18.11.2016.
8. சென்னை, உயர்நீதிமன்ற வழக்கு ரிட் மனு எண்.15295/2012 - மீதான தீர்ப்பாணை நாள். 11.09.2018.
9. அரசாணை (நிலை) எண்.143, பள்ளிக்கல்வி (பக3(1))த் துறை, நாள். 19.08.2019.
10. அரசாணை (நிலை) எண்.218, பள்ளிக்கல்வி (பக3(1))த் துறை நாள்.06.12.2019.
11. அரசாணை (நிலை) எண்.176, பள்ளிக்கல்வி (பக3(1))த் துறை, நாள். 17.12.2021.
12. சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரக இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) ந.க.எண் 69913/சி4/இ2/2021, நாள் 07.01.2022 மற்றும் 07.02.2022
13. சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்கள்.

*****

அரசு / நகராட்சி உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு உடற்கல்வி இயக்குநர் நிலை-II ஆகப் பதவி உயர்வு வழங்கும் பொருட்டு 01.01.2022 அன்றைய நிலையில் உத்தேச தேர்ந்தோர் பெயர் பட்டியல் அனைத்து முதன்மை கல்வி அலுவலர்களுக்கும் பார்வை 12ல் காண் 07.01.2022 நாளிட்ட செயல்முறைகளில் கண்டவாறு அனுப்பப்பட்டு, அதில், சேர்க்கை, நீக்கம் மற்றும் திருத்தங்கள் கோரப்பட்டது.

பார்வை 13-ல் கண்டவாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களிடருந்து பெறப்பட்ட கருத்துருக்கள் அடிப்படையில், சேர்க்கை, நீக்கம் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, உடற்கல்வி ஆசிரியர்களுக்கு உடற்கல்வி இயக்குநர் நிலை-II ஆகப் பதவி உயர்வுக்கான திருத்திய தேர்ந்தோர் பெயர் பட்டியல் பார்வை 12ல் கண்டுள்ள 07.02.2022 நாளிட்ட செயல்முறைகள் மூலம் வெளியிடப்பட்டது.

மேலும், தற்போதைய நிலையில், உத்தேச காலிப்பணியிடத்திற்கேற்ப தகுதி வாய்ந்தோர்கள் 77 எண்ணிக்கையிலான இறுதி தேர்ந்தோர் பெயர்பட்டியல் வெளியிடப்படுகிறது.

இச்செயல்முறைகள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையினை உடன் அனுப்புமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு:
இறுதி தேர்ந்தோர் பெயர் பட்டியல்.

ஒம்/- பூ.ஆ.நரேஷ்
இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

ந.க.எண். 111/2022 நாள். 02-03-2022
(நகல்) தேவையுள்ளவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.

பெறுநர்.
சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர்,
வேலூர் மாவட்டம்.